| | | |
|---|---|---|
| | **மாகாணக் கல்வித் திணைக்களம்**<br>**வடக்கு மாகாணம்**<br>**Provincial Department of Education, Northern Province** | |

**இரண்டாந்தவணைப் பரீட்சை - 2022**

| | | |
|---|---|---|
| தரம் :- 11 | குடியியற்கல்வி 62 T I II | 3.00 மணித்தியாலம்<br>மேலதிக வாசிப்பு நேரம்<br>10 நிமிடங்கள் |

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும்,விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களைஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக

கவனிக்க

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான இல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றை பின்பற்றுக

1. புராதான காலத்தில் மக்களுடைய விருப்பங்களை நேரடியாக மக்கள் மன்றங்கள் மூலம் கேட்டறிந்து ஆட்சி நடைபெற்ற நகரம் எது?
   (1) ஸ்பாட்டா (2) கொறிந் (3) எதென்ஸ் (4) லறிஸ்கா

2. தாராண்மை வாதக்கருத்துக்கள் பரவத் தொடங்கி தனி மனித சுதந்திரம் முக்கியத்துவமடைந்ததைத் தொடர்ந்து ஆட்சி செயற்பாடுகளில் ஏற்பட்ட மாற்றம்
   (1) மக்கள் பிரதிநிதிகளின் அதிகாரம் மேலோங்கியது
   (2) நிலமானிய சமுதாய அமைப்பு முறை காணப்பட்டது
   (3) மக்களின் பங்களிப்பு ஆட்சியில் நேரடியாக பெறப்பட்டது
   (4) பிரபுக்கள் அதிகாரம் அதிகரித்தது

3. சமதர்ம அரசியல் கோட்பாட்டை அடிப்படையாக கொண்டு செயற்படும் கட்சி முறை
   (1) பல கட்சி முறை (2) ஒரு கட்சி முறை
   (3) இரு கட்சி முறை (4) சர்வாதிகார ஆட்சி முறை

4. நாடொன்றில் ஏற்படுகின்ற ஏதேச்சாதிகார ஆட்சியை தடுப்பதற்கு உதவுவது
   (1) பிரபுத்துவ ஆட்சி முறைமை (2) மன்னராட்சி முறைமை
   (3) இராணுவ ஆட்சி முறைமை (4) அரசியல் கட்சி முறைமை

5. நாட்டின் ஆட்சிச் செயற்பாடுகளில் மக்கள் பங்கு பெறுவதற்கான வாய்ப்பினை வழங்குவது
   (1) பாராளுமன்றம் (2) தொகுதிகள் (3) தேர்தல் (4) விருப்பம்

6. சட்டங்களை இயற்றவும் நடைமுறைப்படுத்தவும் மக்களை அச்சட்டங்களுக்கு அடிபணியச் செய்வதற்கும் உதவுவது
   (1) அரசு (2) அரசாங்கம் (3) நிலம் (4) இராணுவம்

7. பல்லின சமூக அமைப்பு இல்லாத நாடுகளுக்கு மிகப் பொருத்தமான ஆட்சி முறை
   (1) சமஷ்டி ஆட்சி (2) ஒற்றையாட்சி
   (3) பல கட்சி ஆட்சி (4) இராணுவ ஆட்சி

8. ‘வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கு வழிவகுக்கும்’ என வரைவிலக்கணப் படுத்தப் பட்டிருக்கும் ஆட்சி முறை
   (1) சமஷ்டி ஆட்சி (2) பல கட்சி ஆட்சி
   (3) மன்னராட்சி (4) ஒற்றையாட்சி

9. புராதன இலங்கையில் அநுராதபுர ஆட்சியாளன் பண்டுகாபய மன்னனால் கிராம நிர்வாகத்திற்காக நியமித்திருந்த அதிகாரிகள்
   (1) பருமக, காமினி (2) குர்க்கபதி, கிருகபதி
   (3) கம்பார, காமினி (4) கமிக, பத்த

10. இலங்கையில் கிராம சபைகளின் அதிகாரம் மேலும் அதிகரிக்கக் காரணமாக இருந்த அரசியல் யாப்பு சீர்திருத்தம்
   (1) மனிங் அரசியல் யாப்பு சீர்திருத்தம்
   (2) குரு மக்கலம் அரசியல் யாப்பு சீர்திருத்தம்
   (3) கோல்பரி அரசியல் யாப்பு சீர்திருத்தம்
   (4) டொனமூர்அரசியல் யாப்பு சீர்திருத்தம்

11. இலங்கையில் மாவட்ட மட்டத்தில் நிர்வாகத்தை பெற்றுக் கொடுப்பதற்காகவும், அரசியல் தலைமைத்துவத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்காகவும் 1973 இல் உருவாக்கப்பட்ட முறை
   (1) அரசியல் அதிகார சபை
   (2) கிராம சபை
   (3) நகர சபைகள்
   (4) உள்ளூராட்சி சபை

12. இலங்கையில் மத்திய அரசு, மாநில அரசு என்பவற்றின் இணைப்பாளராக செயற்படுபவர்?
   (1) ஜனாதிபதி (2) முதலமைச்சர் (3) ஆளுனர் (4) பிரதமர்

13. மாகாணம் ஒன்றின் முதலமைச்சரும், நான்கு பேருக்கு மேற்படாத அமைச்சர்களும் தெரிவு செய்யப்படுவது
   (1) ஜனாதிபதியின் விருப்பின் அடிப்படையில்
   (2) மாகாண சபையின் சட்டவாக்கத் துறையின் பிரதிநிதிகளிலிருந்து
   (3) ஆளுனரின் விருப்பின் அடிப்படையில்
   (4) மத்திய அரசின் சட்டவாக்கத் துறையின் பிரதிநிதிகளிலிருந்து

14. மாகாண சபைக்குரிய நிரல் I இன் கீழ் வரும் அதிகாரங்களின் எண்ணிக்கை
   (1) 67 (2) 57 (3) 47 (4) 37

15. முழு உலகமும் ஒரு கிராமமாக சுருங்கியிருப்பதில் செல்வாக்கு செலுத்திய காரணிகளில் ஒன்று
(1) போக்குவரத்து விருத்தி
(2) சந்தைகளின் விரிவாக்கம்
(3) தொடர்பாடல் சாதனங்களின் விருத்தி
(4) வர்த்தக விருத்தி

16. இலங்கையில் அதிக மக்களால் பேசப்படும் மொழி
(1) மலாய் மொழி (2) சிங்கள மொழி
(3) தமிழ் மொழி (4) ஆங்கில மொழி

17. இலங்கையில் வாழ்கின்ற முஸ்லீம்களின் மதம்
(1) பௌத்தம் (2) இந்து (3) கிறிஸ்தவம் (4) இஸ்லாம்

18. பன்மை பண்பாட்டுச்சமூகம் இலங்கையில் உருவாவதில் செல்ல்வாக்கு செலுத்திய ஆக்கிரமிப்பு தொடர்பான காரணி
(1) புவியியல் அமைவிடம்
(2) கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு
(3) விஜயனும் அவனது தோழர்களும் வருகை தந்தமை
(4) கிழக்கு- மெற்கு வர்த்தகப் பாதையின் மத்தியில் அமைந்திருந்தமை

19. 1980களின் பின்னர் நல்லாட்சி அரசு என்ற எண்ணக்கரு தோற்றம் பெறுவதற்கு காரணமாக இருந்த விடயங்களில் ஒன்று
(1) பொருளாதாரம் உரிய வகையில் முகாமை செய்யப்பட்டமை
(2) மனித வளங்கள் உரிய வகையில் முகாமை செய்யப்பட்டமை
(3) இலஞ்ச ஊழல் அற்ற அரசுகள் காணப்பட்டமை
(4) அரச நிர்வாகிகள் பொறுப்புக் கூறாது செயற்பட்டமை

20. வேற்றுமைகளுக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துதல் என்ற இலக்கை அடிப்படையாக கொண்டு செயற்படுகின்ற ஐரோப்பிய நாடு?
(1) சுவிட்சர்லாந்து
(2) துருக்கி
(3) ஸ்பெயின்
(4) பேர்த்துக்கல்

21. வளங்கள் தேவையிலும் பார்க்க குறைவாக காணப்படும் தன்மை
(1) விருப்பங்கள்
(2) கேள்வி
(3) அருமை
(4) நிரம்பல்

22. உற்பத்தியின் போது செலவு ஏற்படுவதும் அவற்றை நுகர்வு செய்யும் போது விலை செலுத்த வேண்டியிருப்பதுமான பொருட்கள்
(1) பொருளாதாரமல்லாத பண்டங்கள்
(2) பொருளாதார பண்டங்கள்
(3) இலவச பண்டங்கள்
(4) இயற்கையாக கிடைக்கும் பண்டங்கள்

23. உற்பத்தி செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படும் வளங்கள்
(1) உற்பத்திக் காரணிகள் (2) பொருளாதார காரணிகள்
(3) பொருளாதாரமல்லாக் காரணிகள் (4) முதலீட்டு காரணிகள்

24. பின்வருவனவற்றிலிருந்து விவசாய உற்பத்திகளுடன் தொடர்புடைய விடையை தெரிக
(1) மோட்டார் வாகனம், ஆடை, காகிதம்
(2) மரக்கறி, மீன், முட்டை
(3) தபால், சுகாதாரம், மின்சாரம்
(4) மரக்கறி, தபால், காகிதம்

25. பொருளாதாரம் ஒன்றில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், சேவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் தனியாட்கள் தமது தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்து கொள்வது
(1) உற்பத்தி
(2) நுகர்வு
(3) அருமை
(4) கேள்வி

26. சொத்துக்கள், வளங்களின் உரிமையின் பெரும் பகுதி தனியார் துறை கொண்டிருப்பதுடன் இலாபத்தினை நோக்கமாக கொண்டு செயற்படுகின்ற பொருனாதார முறை
(1) கலப்பு பொருளாதார முறை
(2) சமதர்ம பொரளாதார முறை
(3) முதலாளித்துவ பொருளாதார முறை
(4) நவ லிபரல்வாத பொருளாதார முறை

27. 1977ஆம் ஆண்டின் பின் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதார கொள்கை
(1) மூடிய பொருளாதார கொள்கை
(2) திறந்த பொருளாதார கொள்கை
(3) கலப்பு பொருளாதார கொள்கை
(4) சமதர்ம பொருளாதார கொள்கை

28. 1970- 1977 காலப்பபுதியில் இலங்கையின் பொருளாதாரத்தில் காணப்பட்ட பிரதான பண்பு
(1) தனியார் துறைக்கு வரிச்சலுகைகள் வழங்கப்பட்டது
(2) ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டது
(3) நுகர்வோருக்கு சலுகைகள் வழங்கப்பட்டது
(4) இறக்குமதிகள் தொடர்பில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது

29. பின்வருவனவற்றிலிருந்து நுண்மையான மோதலுக்கான உதாரணத்தை தெரிக
(1) சமய மேதல்
(2) இன மோதல்
(3) தொழிற்சங்க மோதல்
(4) காணிப்பிரச்சினை

30. பாலஸ்தீன் - இஸ்ரேல் ஆக்கிரமிப்பு
(1) இன மோதல்
(2) சமூக மோதல்
(3) அரசியல் மோதல்
(4) சமய மோதல்

31. நிரல் I இல் தீர்ப்பு கூறுகின்ற நியாய சபைகளும் நிரல் II இல் தீர்ப்புக் கூறக்கூடிய பிரச்சினைகளும் தரப்பட்டுள்ளன. நிரல் I இற்கு ஏற்ப நிரல் II இனைத் தொடர்பு படுத்தி சரியான விடையை தெரிவு செய்க

| நிரல் I<br>நியாய சபைகள் | நிரல் II<br>தீர்ப்பு கூறக்கூடிய பிரச்சினைகள் |
|---|---|
| 1. தொழிலாளர் தீர்வு சபை | A- விவாகரத்து |
| 2. காதி நீதிமன்றம் | B- வீட்டுப்பிரச்சினை |
| 3. வீட்டு வாடகை சபை | C- தொழில் பிரச்சினை |
| | D- துஷ்பிரயோகம் |

(1) CAB (2) CBD (3) ACD (4) BDC

32. நீதி நிர்வாக மாவட்டங்களில் உள்ள மாவட்ட நீதிமன்றங்களின் எண்ணிக்கை?
(1) 74 (2) 64 (3) 54 (4) 44

33. மாவட்ட நீதிமன்றத்திற்குரிய நீதிபதிகளை நியமனம் செய்வதற்கும் விலக்குவதற்கும் அதிகாரமுடையது
(1) ஜனாதிபதி ஆணைக்குழு
(2) நீதிச் சேவை ஆணைக்குழு
(3) பொது சேவை ஆணைக்குழு
(4) மனித உரிமை ஆணைக்குழு

34. இலங்கையின் பிரதான சட்ட அலுவலர்
(1) ஜனாதிபதி
(2) பிரதமர்
(3) மேல் நீதிமன்ற நீதிபதி
(4) சட்டமா அதிபர்

35. நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவர்
(1) சட்டமா அதிபர்
(2) பிரதம நீதியரசர்
(3) ஜனாதிபதி
(4) மாவட்ட நீதிபதி

36. இலங்கையிலுள்ள நிர்வாக மாவட்டங்களின் எண்ணிக்கை?
(1) 9 (2) 20 (3) 25 (4) 30

37. நிரல் I இல் யாப்புச் சீர்திருத்தங்களும் நிரல் II இல் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்ட பெயர்களும் தரப்பட்டுள்ளன. நிரல் I க்கு ஏற்ப நிரல் II இனை ஒழுங்குபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடை

| நிரல் I- யாப்பு சீர்திருத்தங்கள் | நிரல் II- பாராளுமன்ற பெயர்கள் |
|---|---|
| 1. டொனமூர் யாப்பு | A-சட்டவாக்க கழகம் |
| 2. சோல்பரி யாப்பு | B-தேசிய அரசு பேரவை |
| 3. முதலாம் குடியரசு யாப்பு | C-பிரதிநிதிகள் சபை |
| | D-அரசு கழகம் |

(1) DCB (2) ADC (3) BDC (4) DAB

38. இரண்டு மாவட்டங்களை கொண்ட மாகாணங்களில் ஒன்று

(1) வட மாகாணம் (2) கிழக்கு மாகாணம்

(3) மேல் மாகாணம் (4) ஊவா மாகாணம்

39. இலங்கையின் சட்டத்துறைக்கு பொதுத் தேர்தலில் வாக்காளர் மூலம் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?

(1) 196 (2) 225 (3) 29 (4) 25

40. ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்கான மாநகர சபையை பிரகடனப்படுத்துவது அதன் எல்லைகளை நிர்ணயிப்பது, பெயரிடுவது போன்ற அதிகாரத்தினை கொண்டிருப்பவர் யார்?

(1) ஜனாதிபதி (2) பிரதமர்

(3) உள்ளூராட்சி அமைச்சர் (4) நீதி அமைச்சர்

(40x 1= 40 புள்ளிகள்)

## பகுதி II

- முதலாம் வினா கட்டயமானதாகும்.
- முதலாம் வினாவுக்கும் வேறு நான்கு வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக

1.
   (i) சனநாயக ஆட்சி முறையின் இரண்டு பிரதான பிரிவுகளும் எவை?
   (ii) சனநாயக சமூகத்தில் வாக்குரிமை வழங்கும் போது கவனிக்கப்படாத விடயங்கள் இரண்டு தருக?
   (iii) இறைமை என்பதனுள் உள்ளடக்கப்படும் விடயங்கள் இரண்டு தருக?
   (iv) அமெரிக்க சட்டத்துறையான காங்கிரசின் இரண்டு மன்றங்களும் எவை?
   (v) உற்பத்தி காரணிகள் இரண்டு குறிப்பிடுக?
   (vi) மூளை உழைப்பு சார்ந்த தொழில்கள் இரண்டு தருக?
   (vii) மோதல் உருவாகுவதற்கான, வேற்றுமைகள் ஏற்படக் கூடிய வழிவகை இரண்டு தருக?
   (viii) உள்ளக மோதலின் இரண்டு வகைகளும் எவை?
   (ix) சட்டத்தின் வகைகள் இரண்டினையும் குறிப்பிடுக?
   (x) இலங்கையில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் இரண்டு தருக?

(10 x 2 = 20 புள்ளிகள்)

2.
   (i) தேசிய அரசுகளின் பிரதான பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக (02 புள்ளிகள்)
   (ii) தேசிய அரசின் தோற்றத்திற்கான மூன்று காரணிகளைக் குறிப்பிடுக (03 புள்ளிகள்)
   (iii) தேசிய அரசுகளின் மூன்று பொறுப்புக்களைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. (05 புள்ளிகள்)

3.
   (i) சுவிட்சர்லாந்தில் சமஷ்டி பேரவையின் இரண்டு சபைகளைத் தருக (02 புள்ளிகள்)
   (ii) சுவிட்சர்லாந்தின் சமஷ்டி முறையின் சிறப்பியல்புகள் மூன்று தருக? (03 புள்ளிகள்)
   (iii)
      **a.** சுவிட்சர்லாந்தில் மத்திய அரசின் அதிகாரங்கள் மூன்று குறிப்பிடுக? (03 புள்ளிகள்)
      **b.** சுவிட்சர்லாந்தில் மாநிலங்களுக்குரிய அதிகாரங்கள் இரண்டு குறிப்பிடுக? (02 புள்ளிகள்)

4.

(i) நல்லாட்சியின் அடிப்படை பண்புகள் இரண்டு தருக? (02 புள்ளிகள்)

(ii) நல்லாட்சி அரசின் பொருளாதார பெறுமானங்கள் மூன்று குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

(iii) பன்மைப்பண்பாட்டு சமூகத்தில் நல்லாட்சியை செயற்படுத்துவதன் மூலம் கிடைக்கப்பெறுகின்ற மூன்று நன்மைகளை குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக? (05 புள்ளிகள்)

5.

(i) உலகமயமாதல் என்பது தொடர்பாக நீர் விளங்கிக் கொள்வது யாது? (02 புள்ளிகள்)

(ii) உலகமயமாதலின் விசேட பண்புகள் மூன்று குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

(iii)

**a.** உலகமயமாதல் இலங்கையில் ஏற்படுத்தியுள்ள சாதகமான தாக்கங்கள் மூன்று குறிப்பிடுக (03 புள்ளிகள்)

**b.** உலகமயமாதல் இலங்கையில் ஏற்படுத்தியுள்ள பாதகமான தாக்கங்கள் இரண்டு குறிப்பிடுக (02 புள்ளிகள்)

6.

(i) தனி நபர் ஒருவரின் மனதில் ஏற்படும் கட்டுப்படுத்த முடியாத உணர்ச்சிகள் இரண்டு தருக? (02 புள்ளிகள்)

(ii) மனதில் அமைதியை ஏற்படுத்திகொள்வதற்கான மூன்று வழிகளை தருக? (03 புள்ளிகள்)

(iii)

**a.** மோதலின் வகைகள் மூன்று குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

**b.** மோதலுக்கான காரணங்கள் இரண்டு தருக? (02 புள்ளிகள்)

7.

(i) சட்டத்தின் வகைகள் இரண்டு தருக? (02 புள்ளிகள்)

(ii) இலங்கையில் செயற்படுகின்ற மூன்று சட்ட தொகுதிகளை தருக? (03 புள்ளிகள்)

(iii)

**a.** நீதவான் நீதிமன்றங்களினால் விசாரணை செய்யக்கூடிய அதிகாரமுடைய வழக்குகள் மூன்று குறிப்பிடுக (03 புள்ளிகள்)

**b.** 1978ம் ஆண்டு அரசியல் யாப்பின்படி உருவாக்கப்பட்ட ஒம்புட்ஸ்மன் பதவியின் பிரதான செயற்பாடுகள் இரண்டு தருக? (02 புள்ளிகள்)

***